
FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

| தரம் :- 13 (2019) | ஐரோப்பிய வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|



**பகுதி ஐ**

| | | | |
|---|---|---|---|
| 1) 5 | 11) 5 | 21) 4 | 31) 2 |
| 2) 1 | 12) 4 | 22) 2 | 32) 4 |
| 3) 2 | 13) 3 | 23) 3 | 33) 5 |
| 4) 3 | 14) 3 | 24) 4 | 34) 1 |
| 5) 1 | 15) 3 | 25) 5 | 35) 4 |
| 6) 1 | 16) 3 | 26) 4 | 36) 2 |
| 7) 4 | 17) 1 | 27) 5 | 37) 5 |
| 8) 1 | 18) 2 | 28) 3 | 38) 2 |
| 9) 2 | 19) 4 | 29) 2 | 39) 4 |
| 10) 1 | 20) 5 | 30) 3 | 40) 1 |

**பகுதி யு**

1) படம் குறித்தல்

**பகுதி டீ**

2)

1. ஒகஸ்டஸ் சீசர், யூலியர் சீசர், ஹெரகெல்லா, நீரோ, குளோடியஸ்
2. பண்டைய உரோமரிடையே மூன்று வகையான ஆட்சிமுறைகள் காணப்பட்டன.
   1. அரசாட்சி   2. மக்களாட்சி   3. பேரரசாட்சி

   1. அரசாட்சி
      - தந்தைவழிச் சமூகமன உரோமர் ஆரம்பத்தில் அரசன் ஒருவனைத் தலைவனாகக் கொண்டு ஆட்சி செய்தனர். இது கி.மு 753 முதல் கி.மு 510 வரை இடம்பெற்றது.
      - அரசன் அதிக அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும் பாரம்பரியங்கள் மூலம் அவை வரையறுக்கப்பட்டிருந்தது. (அரசனின் கீழ் இருந்த மூத்தோர் சபை செனட்சபை என அழைக்கப்பட்டது.)
      - அரசன், சமயப் பிரதானி, தலைமை நீதிபதி, படைத்தளபதி போன்ற அதிகாரங்களை கொண்டிருந்தாலும் முக்கியமான விடயங்கள் தொடர்பாக செனட்சபையின் ஆதரவுடனேயே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
      - அரசனின் பதவி ஏற்பை மக்கள் அங்கீகரிக்க வேண்டி இருந்தாலும் அவனை மக்களால் பதவி நீக்கம் செய்ய முடியாது.
      - அரசன், செனட்சபை இரண்டிற்கும் புறம்பாக பொது மக்கள் சபை ஒன்றும் இருந்தது. யுத்த சேவையில் ஈடுபட்ட சகல ஆண்களும் இதில் அங்கத்துவம் வகித்தனர்.
      - இங்கு அரசியல் உரிமை பெட்சீரியன் எனப்படும் நிலச்சுவாந்தர்களிற்கு மாத்திரம் இருந்ததுடன் அவர்கள் இறுதி உரோம அரசனான எட்ரஜ்கன் இனத்தைச் சேர்ந்த டார்க்வின் அரசனை விரட்டி விட்டு மக்களாட்சியை ஏற்படுத்தினார்.

   2. மக்களாட்சி
      - முன்னர் அரசன் கொண்டிருந்த சிவில் மற்றும் இராணுவ அதிகாரங்கள் பிரபுக்களின் வாக்குகளால் வருடாந்தம் தெரிவு செய்யப்படும் இரு கொன்ஸல்களிடம் வழங்கப்பட்டது.
      - ஒரு கொன்ஸ்லின் தீர்மானத்திற்கு மறுப்புத் தெரிவிக்க அடுத்த கொன்ஸலிற்கு அதிகாரம் இருந்தது.
      - நிர்வாக விடயங்களில் இவர்களிற்கு உதவியாக வருடாந்தம் தெரிவு செய்யப்படும் நீதிபதிகள் மற்றும், நிர்வாகிகள் துணை புரிந்தனர்.
      - சென்சூரியன் சபையினால் வருடாந்தம் கொன்ஸல்கள், நீதிபதிகள், நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர்.
      - இச்சபையில் அதிக மக்கள் பிரதிநிதித்துவம் காணப்பட்டாலும் வாக்குரிமையின் காரணமாக அதனை பெட்ரிசியன்கள் அதிக செல்வாக்குடன் நடாத்தி வந்தனர்.

agaram.lk

- செனட் சபை – சட்டவாக்கத்தில் பலமான அமைப்பாகும். இதில் பெட்ரீசியக்கள் ஆயுட்கால பிரதிநிதிகளாக இருந்தனர். நிதி மற்றும் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக இச்சபையே அதிகாரம் பெற்றிருந்தது.
- பிளிபியன் சாதாரண மக்கள் நீண்டகாலமாக பெட்ரீசியன்களிற்கு எதிராக மேற்கொண்ட போராட்டத்தின் விளைவாக பிளிபியன்களின் சபையொன்றும் அரசியல் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- இவ்வாறான ஆட்சிமுறை நிலவிய உரோமபுரியின் எல்லைகள் விசாலமாக இருந்மையினாலும் பாரிய அரசை நிர்வாகம் செய்வது கடினமாக இருந்தமையினாலும் மக்களாட்சி முறை வீழ்ச்சியடைந்தமை.

3. பேராட்சி (கி.மு 27 – கி.பி 476)
   - கி.மு 27 இல் ஆட்சிக்கு வந்த ஒக்ஸ் டேவியன் எனப்பட்ட ஒகஸ்டஸ் சீசர் உரோமபுரியின் முதலாவது பேரரசரானார்.
   - இவன் அரசாட்சியின், இராணுவ நிர்வாகத்தையும், மக்களாட்சி நிறுவனங்களையும் ஒன்றிணைத்து சர்வாதிகாரமிக்க ஆட்சி முறையை மேற்கொண்டான்.
   - இங்கு செனட் சபையானது முன்னர் கொண்டிருந்த அதிகாரங்களை இழந்து அரசனிற்கு ஆலோசனை வழங்கும் சபையாக மாறியது.

3. பியூனிக் போர்
   - வட ஆபிரிக்காப் பகுதியில் அதிகாரத்தில் இருந்த காத்தேஜ் இனத்தினருடன் இடம்பெற்ற யுத்தத்தினையே பியுனிக் யுத்தம் எனக் குறிப்பிடுவார்.
   - இது மூன்று கட்டங்களில் இடம் பெற்றது.
     1. கி.மு 264 – 241
     2. கி.மு 218 – 201
     3. கி.மு 149 - 146
   - இம்மூன்று யுத்தங்களையும் வெற்றிகொண்டு வட ஆபிரிக்கப் பகுதிகளில் உரோமரின் ஆதிக்கம் ஏற்பட்டது.

3) • 1618 தொடக்கம் 1648 வரை ஜேர்மனியை யுத்தத் தளமாகக் கொண்டு கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தவர்களும் இடையில் நடைபெற்ற யுத்தம் முப்பதாண்டுப் போர் எனப்படுகிறது.
- இதுவே ஐரோப்பாவில் நடைபெற்ற இறுதிச் சமய யுத்தமாகும்.
- ஐரோப்பாவில் சமய சீர்திருத்த யுகத்தின் முடிவாக இது கருதப்படுகிறது.
- சமயத்தைப் பின்பற்றுதல் தனிப்பட்ட செயற்பாடாகும் அரசாங்கம் சமயம் தொடர்பான விடயங்களை தலையிடக் கூடாது என்ற முடிவு பெறப்பட்டது.
- பிரான்ஸ் ஐரோப்பாவில் பலம் வாய்ந்த நாடாக எழுச்சியுற்றது.
- டென்மார்க், சுவீடன், பிரான்ஸ் போன்ற நாடுகள் இதில் கலந்து கொண்டனர். விசேடமாக பிரான்ஸ் இவ்யுத்தத்தின் பின் முக்கியத்துவம் பெற்றது.
- மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட விடைகளுக்கு புள்ளி வழங்குக.

agaram.lk

4) 1. இங்கிலாந்தில் பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தியமை. மரபுமுறை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திற்குப் பதிலாகக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமுறை ஏற்படல்.
2. குடிசைக் கைத்தொழில் வீழ்ச்சியுறல், கைத்தறி நெசவு பாதிப்படைதல்.
3. பாரிய தொழிற்சாலைகள் உருவாகுதல், அவற்றின் மூலம் பெருமளவிலான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டமை. இங்கிலாந்து உலகின் தொழிற்சாலையாக மாறியது.
4. நகரங்கள் வளர்ச்சியுறல், நகரமயமாதல் அதிகரித்தல்.
5. புதிய குடியேற்றவாதம் தோன்றுவதற்கு வழிவகுத்தமை.
6. தனியார்துறை வளர்ச்சியடைதல், வங்கி முறை, காப்புறுதி வளர்ச்சி, செல்வந்தர், ஏழை என்ற பிரிவு ஏற்பட்டது.

7. தொழிற்சாலைகளையுடைய செல்வந்த வகுப்பும், தொழிலில் ஈடுபடும் தொழிலாளர் வகுப்பும் தோன்றுதல்.
8. தொழிலாளர் பிரச்சினை, தொழிலாளர்களிடையே சச்சரவுகள் தோன்றின.
9. தொழிற்சங்கள் தோன்றியமை, வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன.
10. சூழல் மாசடைதல். நீரும் வளியும் மாசடைந்தது.

5) பொருத்தமான சிறுகுறிப்புகளுக்கு 8 புள்ளிகள் வீதம் வழங்கவும்.

**பகுதி ஊ**

6)

1. கோர்ச்சிக்கா தீவு
2. • இத்தாலியை ஆக்கரமித்தல். • எகிப்தை ஆக்கிரமித்தல்.
3. • மூன்று கொன்சல்களில் பிரதான கொன்சலாகப் பதவி வகித்தமை.
   • கொன்சல்.
4. 1. நெப்போலியன் உள்நாட்டுக் கொள்கைகள்.
      - பலரது ஆதிக்கங்களின் கீழிருந்த நிறுவனங்களைக் கலைத்தான்.
      - பிரான்சியப் புரட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றான்.
      - அவனது குறிக்கோள்கள் பிரான்சிய சமுதாயத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது.
      - பலம் வாய்ந்த மத்திய அரசை ஏற்படுத்தி, நிர்வாகத்தை ஒருமுகப்படுத்தினான்.
      - பாப்பரசருடன் இணக்கத்தை ஏற்படுத்தினான். புரட்சியின் போது கத்தோலிக்க திருச்சபை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றான்.
      - நெப்போலியனின் நீதித் தொகுப்பு.
      - கல்விச் சீர்திருத்தங்கள்.
      - பொருளாதாரத்தைப் பலப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் முக்கியம் பெற்றன.

   2. நெப்போலியன் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கை.
      - பிரான்சை மையமாகக் கொண்ட பேரரசைக் கட்டியெழுப்ப முயன்றான்.
      - தனது ஆட்சியின் கீழ்க்கொண்டு வரப்பட்ட பிரதேசங்களில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கையை மேற்கொண்டான்.
      - நெப்போலியனின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை நோக்கின் அவன் ஐரோப்பாவில் தலைசிறந்த அரசியல் மேதை எனக் கொள்வோம்.

agaram.lk

7)

- இத்தாலியின் தேசியவாதம் எழுச்சியுறல்
- காபோனாரி இயக்கம்
- காபோனாரி இயக்கத்தினால் ஆஸ்திரிய ஆதிக்கத்துக்கு எதிராகச் சுதந்திரப்போர் ஆரம்பமாகியமை.
- மாசினியின் இளம் இத்தாலிய இயக்கம்
- ஜியோபர்டியின் தலைமையின்கீழ் புதிய இயக்கம் ஆரம்பமாகியமை.
- ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் லிபர்வாத அரசியல் சீர்திருத்தத்தை முன்வைத்தல்.
- 1848 ஆம் ஆண்டு இத்தாலியின் விடுதலைப்போர்.
- எதிர்ப்புக்கள் எழுந்தமையும் இவ்வியக்கம் தோல்வியடைந்தமையும்.

இத்தாலிய ஐக்கியத்திற்கு உதவியோர்

- கவுண்ட் கவூர், பீட்மன்ட் அரசின் பிரதமராகியமை.
- இத்தாலி பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தமை.
- லிபர்வாதிகளின் உதவியைப் பெற்று இத்தாலியில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.
- இத்தாலி ஐக்கியமாகும் செயற்பாட்டின் தலைமைத்துவம் பீட்மன்ட் அரசுக்கு உரியதாகுதல்.

- கிரிமியன் போரில் சம்பந்தப்படுதல்
- இத்தாலிய ஐக்கியத்திற்குப் பிரான்சினதும் பிரித்தானியரதும் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
- கவுனட் ' கவூர், பிரானசின ' மூனறாம ' நெபபோலியன ' ஆகியோர ' புலொமபியாஸ ' உடனப்டிகக்கயில் கைச்சாத்திடல்.

கரிபால்டி

- இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்.
- கரிபால்டியின் செஞ்சட்டை வீரர்களால் தென் இத்தாலியப் பிரதேசம் கைப்பற்றப்பட்டு பீட்மன்ட் அரசனிடம் கொடுக்கப்பட்டமை

–உரோமைத் தவிர்ந்த பப்பரசரின் அனைத்துப் பிரதேசங்களும் கைப்பற்றப்படல்.

–1866 ஆம் ஆண்டு வெனிஸ் இணைக்கப்படல்.

–1870 ஆம் ஆண்டு உரோம் இணைக்கப்பட்டதுடன் இத்தாலியின் ஐக்கியம் நிறைவுற்றமை.

8) இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்தவுடன் ர்'யா, அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கிடையே கருத்து முரண்பாடுகள் அதிகரித்தன.

- யுத்தத்தின் பின்னர் ஜேர்மனி மீண்டும் கட்டியெழுப்பபட வேண்டிய சோவியத் ர்'யா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கீழ் நான்கு பாதுகாப்பு வலயங்களாகப் பிரிந்தமை
- அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் ஜேர்மனியை கட்டியெழுப்புவதை நிறைவு செய்து அங்கு தேர்தலை நடாத்தி ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த முனைந்தமை.
- சோவியற், பலமான ஜேர்மன் உருவாக்கப்படுவது தனக்கு அச்சுறுத்தலாகும் எனக் கருதி ஜேர்மனியைக் கூறுபடுத்தி நிர்வாகத்தை செயற்பட வைக்கக் கருதியமை.
- இதனால் ஜேர்மனி மேற்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி என முதலாளித்துவம் சமூகவுடமை இரண்டாகப் பிளவு அடைந்தது.
- ர்'யா கைப்பற்றியிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தேர்தலை நடாத்தி அரசாங்கத்தை அமைப்பதற்கு மேற்கத்திய வல்லரசுகள் முனைந்தாலும் ர்'யா சமவுடமையை அங்கு நிறுவியமை.
  - சமவுடமை வாதத்தை விரிவுபடுத்தும் செயற்பாட்டில் சோவியத் ஈடுபட்டமை. அமெரிக்கா இதற்கு எதிராகச் செயற்பட்டமை.
  - கம்யூனிச நாடுகளை அழிக்க முடியாது என்பதை உணர்ந்த அமெரிக்கா கம்யூனிசம் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தது.
  - ஐரோப்பாவின் பொருளாதார பிரச்சினைகளில் சிக்குண்ட இத்தாலியிலும் கம்யூனிஸக் கட்சிகள் தோன்றியமை.
  - இதுவரையில் மத்திய கிழக்குப் பகுதிகளில் கம்யூனிசம் பரவுவதைத் தடுக்க பிரித்தானியா – துருக்கி, கிரேக்க பகுதிகளில் யுத்த முகாம்களை நடாத்திச் செல்வதில் ஏற்பட்ட இடர்களினால் அவற்றை அமெரிக்காவிடம் கையளித்தது.
  - ஐரோப்பாவில் கம்யூனிஸம் பரவுவதைத் தடுக்கும் வகையில் மார்'ல் திட்டத்தை அமெரிக்கா அறிமுகப்படுத்தியது.
  - கம்யூனிஸ ஆக்கிரமிப்புக்கெதிராக அமெரிக்காவின் உதவியை வழங்கும் நோக்கில் ட்ரூமன் அவர்களின் நியதிகள் பின்பற்றப்பட்டன.
  - அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்தய நாடுகளும் சோவியத்தின் தலைமையில் கிழக்கு நாடுகளுக்குமென இரு முகாம்கள் உருவாயின.
  - 1948 பேர்லின் பிரச்சினை, 1950 கொரிய யுத்தம் இரு பகுதியினருக்கிடையிலும் பனிப்போரின் உச்ச நிலைக்கிட்டுச் சென்றது.
  - 1949 நேட்டோ (யேவுழு) அமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்கெதிராக ர்'யாவினால் வார்சோ அமைப்பு (றயுசுளுழு) உருவாக்கப்பட்டது.
  - ஊநுவேழு மற்றும் ளுநுயுவுழு என்ற ஆசியாவிலும் மேற்கத்திய அமைப்புக்களை உருவாக்கி ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டனர்.
  - ஐக்கிய நாடுகள் சபையிலும் இருவல்லரசுகளும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி பனிப்போரில் ஈடுபடல். (தமது அரசியல் சிந்தனைகளை ஏனைய நாடுகளிற்கு பெற்றுக் கொடுப்பதிலும் எதிரணியினரின் அரசியல் சிந்தனைகள் பரவுவதைத் தடுப்பதிலும் மும்மரமாக ஈடுபட்டன.

9) பொருத்தமான சிறுகுறிப்புகளுக்கு 8 புள்ளிகள் வீதம் வழங்கவும்.

agaram.lk